23.07.19 EVERWIN MATRIC.HR.SEC.SCHOOL
Std: X MATERIAL OF THE MONTH
TAMIL AUGUST

## இயல் - 3 விருந்து போற்றுதும்

1. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர்.
2. 'விருந்தே புதுமை' என்று கூறியவர் தொல்காப்பியர்.
3. 'மோப்பக் குழையும்' என்ற குறள் விருந்தோம்பல் அதிகாரத்தில் இடம் பெறுகிறது.
4. கலிங்கத்துப் பரணியை இயற்றியவர் செயங்கொண்டார்.
5. "உண்டாலம்ம இவ்வுலகம்" - என்ற பாடல் இடம் பெற்றுள்ள நூல் புறநானூறு.
6. 'அல்லில் ஆயினும்' எனத் தொடங்கும் நற்றிணைப் பாடலில் 'அல்' என்பதன் பொருள் இரவு.
7. "காலின் ஏழடிப்பின் சென்று" என்ற பாடல் இடம் பெற்ற நூல் பொருநராற்றுப்படை.
8. "பொருந்து செல்வமும் கல்வியும்" - என்ற பாடல் இடம் பெற்ற நூல் கம்பராமாயணம்.
9. "விருந்தினரும் வறியவரும்" - எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்றுள்ள நூல் கலிங்கத்துப்பரணி.
10. "குரல் உணங்கு விதைத் திணை" - எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்றுள்ள நூல் புறநானூறு.
11. தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்னும் செய்தி இடம் பெற்றுள்ள நூல் புறநானூறு.
12. விதைத்து விட்டு வந்த நெல்லை அரித்து வந்து பின் சமைத்து விருந்து படைத்த திறம் பெரியபுராணம் நூலில் காட்டப்படுகிறது.
13. நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன்கறியும் பிறவும் கொடுத்தனர்.
14. "பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்" என்ற பாடல் இடம் பெற்றுள்ள நூல் குறுந்தொகை.
15. "மருந்தே ஆயினும் விருந்தொடு உண்" என்ற கொன்றை வேந்தனின் பாடலைப் பாடியவர் ஔவையார்.
16. நாயக்கர், மராட்டியர் ஆட்சிக்காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச் செல்வோர்க்காக கட்டப்பட்டன.
17. தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
18. வாழை இலையின் குறுகலான பகுதி உண்பவர்க்கு இடப்பக்கம் வர வேண்டும்.
19. காய்கறி, கீரை, கூட்டு முதலான உணவு வகைகள் வாழை இலையின் வலப் பக்கத்தில் வைப்பார்கள்.
20. அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச் சங்கம் வாழையிலை விழாவை ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றது.

## இயல்: 2 காசிக்காண்டம் (கவிதைப் பேழை)

21. காசிக் காண்டம், காசி நகரத்தின் பெருமையைக் கூறும் நூல்
22. காசிக் காண்டத்தில் அமைந்துள்ள பாடல் 17-வது பாடலாக அமைந்துள்ளது.
23. முத்துக் குளிக்கும் கொற்கையின் அரசர் அதிவீரராம பாண்டியர்.
24. நறுந்தொகையின் வேறுபெயர் வெற்றி வேட்கை.
25. சீவலமாறன் என்பது அதிவீரராம பாண்டியரின் பட்டப்பெயர் ஆகும்.

## இயல்:3 மலைபடுகடாம் (கவிதைப் பேழை)

26. மலைபடுகடாம் பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று.
27. 'மலைபடுகடாம்' நூலின் வேறுபெயர் கூத்தராற்றுப்படை.
28. 'மலைபடுகடாம்' நூலில் மலையை யானை ஆக உருவகிக்கப்படுகிறது.
29. 'மலைபடுகடாம்' - இதில் பாட்டுடைத் தலைவனாக கூறப்படும் குறுநில மன்னனின் பெயர் நன்னன்.
30. 'மலைபடுகடாம்' என்ற பாடலைப் பாடியவர் பெரும் கௌசிகனார்.

## இயல்:3 தொகாநிலைத் தொடர் (இலக்கணம்)

31. ஒரு தொடர் மொழியில் இரு சொற்கள் இருந்து அவற்றின் இடையினல் சொல்லோ உருபோ இல்லாமல் அப்படியே பொருளை உணர்த்துவது தொகாநிலைத் தொடர் எனப்படும்.
    எ.கா: காற்று வீசியது
    குயில் கூவியது
32. தொகாநிலைத் தொடர்கள் ஒன்பது வகைப்படும்.
33. எழுவாயுடன் பெயர், வினை, வினா ஆகிய பயனிலைகள் தொடர்வது எழுவாய்த் தொடர் ஆகும்.
34. பேருந்து வருமா? இதில் அமைந்தள்ள பயனிலை, வினாப் பயனிலை
35. இனியன் கவிஞர். இதில் அமைந்துள்ள பயனிலை, பெயர்ப் பயனிலை
36. காவிரி பாய்ந்தது. இதில் அமைந்துள்ள பயனிலை, வினைப் பயனிலை.
37. விளியுடன் வினை தொடர்வது விளித்தொடர் ஆகும்.
38. நண்பா எழுது! - 'நண்பா' என்னும் விளிப்பெயர் எழுது என்னும் பயனிலையைக் கொண்டு முடிந்துள்ளது.
39. இடைச் சொல்லுடன் பெயரோ, வினையோ தொடர்வது இடைச் சொல் தொடர் ஆகும். (எ.கா) மற்றொன்று= மற்று + ஒன்று - இதில் மற்று என்னும் இடைச்சொல் ஒன்று என்னும் பெயரைக் கொண்டு முடிகிறது.
40. உரிச்சொல்லுடன் பெயரோ, வினையோ தொடர்வது உரிச்சொல் தொடர் ஆகும். (எ.கா) சாலச் சிறந்தது.
41. ஒரு சொல் இரண்டு, மூன்று முறை அடுக்கித் தொடர்வது அடுக்குத் தொடர் ஆகும். (எ.கா) வருக வருக வருக.
42. வேண்டிய, கூடிய, தக்க, வல்ல முதலான பெயரெச்சங்களை செய என்னும் வாய்பாட்டு வினையெச்சத்துடன் சேர்ப்பதன் மூலம் கூட்டுநிலைப் பெயரெச்சங்கள் உருவாகின்றன.
    எ.கா: கேட்க வேண்டிய பாடல்
    சொல்லத் தக்க செய்தி
    எல்லாம் வல்ல இறைவன்
    படிக்க கூடிய புத்தகம்